ஔவையார் அருளிச் செய்த

ஆத்திசூடி

மூலமும் உரையும்

(மறைத்திரு மறைமலையடிகளார் மாணவர்)
ஆசிரியர். தி. சு. மறைமலை அவர்கள்
எழுதிய உரையும்

ஆசிரியர் நூற்பதிப்புக் கழகம்
பவழக்காரத் தெரு :: சென்னை

ஔவையார் அருளிச் செய்த

ஆத்திசூடி

மூலமும் உரையும்

(மறைத்திரு மறைமலையடிகளார் மாணவர்)
ஆசிரியர். தி. சு. மறைமலை அவர்கள்

எழுதிய உரையுடன்

ஆசிரியர் நூற்பதிப்புக் கழகம்,
பவழக்காரத் தெரு :: சென்னை
1948 3 அணா

ஒளவையார்

இற்றைக்குச் சிறிது ஏறக்குறைய எண்ணூறு ஆண்டு களுக்கு முன் தமிழ்நாட்டிலே அறிவிற்சிறந்த மூதாட்டி யார் ஒருவர் வாழ்ந்தார். அவர் பெயர் ஒளவையார். ஒளவையார் என்னும் பெயர் அவருக்கு அவர் தாய் தந்தையரால் இடப்பட்ட பெயரன்று. ஒளவையார் என்ப தற்கு மூதாட்டி என்று பொருள். கிழவி அல்லது பாட்டி என்னும் பொருளில் இவர் ஒளவையார் என அழைக்கப் பட்டார். அப்பெயரே அவர் பெயராக வழங்குகின்றது. அவரது இளமைக்காலம், பிறப்பு வளர்ப்புப் போன்றவை களைப் பற்றிய செய்திகள் யாதும் அறியக்கூடவில்லை. அவர் அரசராலும் பிரபுக்களாலும், பொதுமக்களாலும் பெரிதும் மதிக்கப்பட்ட முதியவராய் வாழ்ந்தார் என்னும் செய்தி மாத்திரம் தெரிய வருகின்றது.

கல்வியயிலும் சிறுவர் பயிலுதற்கேற்ற பல நூல்களை அவர் செய்துள்ளார். அவை ஆத்திசூடி, கொன்றைவேந் தன், வாக்குண்டாம், நல்வழி என்பவை. இம்மூதாட்டி யார் காலத்திற்கு ஆயிரம் ஆண்டுகளுக்கு முன் ஒளவை யார் என்னும் பெயரோடு இன்னொரு பெண்பாற் புலவரும் விளங்கினர். அப்பெண்பாற் புலவரே ஆத்திசூடி முதலிய நூல்களைச் செய்தவரென மயங்கவேண்டாம்.

ஆசிரியர்

தி. சு. மறைமலை.

ஔவையார் அருளிச் செய்த

ஆத்திசூடி மூலம்

காப்பு

ஆத்திசூடி யமர்ந்த தேவனை
யேத்தி யேத்தித் தொழுவோம் யாமே.

நூல்

1. அறஞ்செய விரும்பு
2. ஆறுவது சினம்
3. இயல்வது கரவேல்
4. ஈவது விலக்கேல்
5. உடையது விளம்பேல்
6. ஊக்கமது கைவிடேல்
7. எண்ணெழுத் திகழேல்
8. ஏற்ப திகழ்ச்சி
9. ஐயமிட் டுண்
10. ஒப்புர வொழுகு
11. ஓதுவ தொழியேல்
12. ஔவியம் பேசேல்
13. அஃகஞ் சுருக்கேல்
14. கண்டொன்று சொல்லேல்
15. ஙப்போல் வளை
16. சனிநீ ராடு

17. ஞயம்பட வுரை
18. இடம்பட வீடெடேல்
19. இணக்கமறிந் திணங்கு
20. தந்தை தாய்ப் பேண்
21. நன்றி மறவேல்
22. பருவத்தே பயிர்செய்
23. மன்றுபறித் துண்ணேல்
24. இயல்பலாதன செயேல்
25. அரவ மாட்டேல்
26. இலவம் பஞ்சிற் றுயில்
27. வஞ்சகம் பேசேல்
28. அழகலாதன செயேல்
29. இளமையிற் கல்
30. அறனை மறவேல்
31. அனந்த லாடேல்
32. கடிவது மற
33. காப்பது விரதம்
34. கிழமைப் படவாழ்
35. கீழ்மை யகற்று
36. குணமது கைவிடேல்
37. கூடிப் பிரியேல்
38. கெடுப்ப தொழி
39. கேள்வி முயல்
40. கைவினை கரவேல்
41. கொள்ளை விரும்பேல்
42. கோதாட் டொழி
43. சக்கர நெறிநில்

44. சான்றோ ரினத்திரு
45. சித்திரம் பேசேல்
46. சீர்மை மறவேல்
47. சுளிக்கச் சொல்லேல்
48. சூது விரும்பேல்
49. செய்வன திருந்தச்செய்
50. சேரிட மறிந்துசேர்
51. சையெனத் திரியேல்
52. சொற்சோர்வு படேல்
53. சோம்பித் திரியேல்
54. தக்கோ னெனத்திரி
55. தானமது விரும்பு
56. திருமா லுக் கடிமைசெய்
57. தீவினை யகற்று
58. துன்பத்திற் கிடங்கொடேல்
59. தூக்கி வினைசெய்
60. தெய்வ மிகழேல்
61. தேசத்தோ டொத்துவாழ்
62. தையல்சொற் கேளேல்
63. தொன்மை மறவேல்
64. தோற்பன தொடரேல்
65. நன்மை கடைப்பிடி
66. நாடொப் பன்செய்
67. நிலையிற் பிரியேல்
68. நீர்விளை யாடேல்
69. நுண்மை நுகரேல்
70. நூல்பல கல்

71. நெற்பயிர் விளை
72. நேர்பட வொழுகு
73. நைவினை நணுகேல்
74. நொய்ய வுரையேல்
75. நோய்க்கிடங் கொடேல்
76. பழிப்பன பகரேல்
77. பாம்பொடு பழகேல்
78. பிழைபடச் சொல்லேல்
79. பீடுபெற நில்
80. புகழ்ந்தாரைப் போற்றிவாழ்
81. பூமி திருத்தியுண்
82. பெரியாரைத் துணைக்கொள்
83. பேதைமை யகற்று
84. பையலோ டிணங்கேல்
85. பொருடனைப் போற்றிவாழ்
86. போர்த்தொழில் புரியேல்
87. மனந்தடு மாறேல்
88. மாற்றானுக் கிடங்கொடேல்
89. மிகைபடச் சொல்லேல்
90. மீதூண் விரும்பேல்
91. முனைமுகத்து நில்லேல்
92. மூர்க்கரோ டிணங்கேல்
93. மெல்லினல்லா டோள்சேர்
94. மேன்மக்கள் சொற்கேள்
95. மைவிழியார் மனையகல்
96. மொழிவ தறமொழி
97. மோகத்தை முனி

98. வல்லமை பேசேல்
99. வாதுமுற் கூறேல்
100. வித்தை விரும்பு
101. வீடுபெற நில்
102. உத்தமனு யிரு
103. ஊருடன் கூடிவாழ்
104. வெட்டெனப் பேசேல்
105. வேண்டி வினைசெயேல்
106. வைகறைத் துயிலெழு
107. ஒன்னாரைத் தேறேல்
108. ஓரஞ் சொல்லேல்

ஆத்திசூடி மூலம் முற்றும்

ஆத்திசூடி மூலமும் உரையும்.

காப்பு

ஆத்தி சூடி அமர்ந்த தேவனை
ஏத்தி ஏத்தி தொழுவோம் யாமே.

(பதவுரை) ஆத்தி - ஆத்திப் பூமாலையை; சூடி - தரித்து, அமர்ந்து - தங்கியிருக்கின்ற, தேவனை - கடவுளை, ஏத்தி - துதித்து, ஏத்தி - துதித்து, யாம் - நாம், தொழுவோம் - கும்பிடுவோம்.

அமர்தல் - தங்குதல்; தேவன் - கடவுள்.

(கருத்து உரை) ஆத்திப் பூமாலை சூடியுள்ள கடவுளைப் புகழ்ந்து பாடிக் கும்பிடுவோம்.

நூல்

1. அறம் செய விரும்பு.

(ப - உ) அறம் - தருமத்தை; செய - செய்வதற்கு; விரும்பு - ஆசைப்படு.

அறம் - தருமம், கடமை.

(க - உ) தருமம் செய்.

2. ஆறுவது சினம்.

(ப- உ) ஆறுவது - தணியவேண்டியது; சினம் - கோபம்.

ஆறுதல் - தணிதல், குறைதல்.

(க - உ) கோபத்தைத் தணி.

3. இயல்வது கரவேல்.

(ப - உ) இயல்வது - பொருந்தி இருக்கிறபொருளை; கரவேல் - (கொடுக்காமல்) மறைக்காதே.

இயல் - பொருந்து. கரவு - மறைத்தல்.

(க - உ) இருக்கின்ற பொருளைக் கொடுக்காமல் மறைக்காதே.

4. ஈவது விலக்கேல்.

(ப - உ) ஈவது - கொடுப்பதை; விலக்கேல் - தடுக்காதே.

ஈ - கொடு. விலக்கு - தடு.

(க - உ) கொடுப்பதைத் தடுக்காதே.

5. உடையது விளம்பேல்.

(ப - உ) உடையது -(உன்னிடம் உள்ள) பொருளை; விளம்பேல் - சொல்லாதே.

உடைமை - பொருள், சொத்து. விளம்பு - சொல்.

(க - உ) நீ, உள்ள பொருளைச் சொல்லாதே.

6. ஊக்கம் அது கை விடேல்.

(ப - உ) ஊக்கம் - முயற்சி; அது - அதனை; கை - (உன்) இடமிருந்து; விடேல் - விடாதே.

விடு - நீக்கு, ஒழி.

(க - உ) முயற்சியை விட்டுவிடாதே.

7. எண் எழுத்து இகழேல்.

(ப - உ) எண் - கணக்கையும்; எழுத்து - மொழியையும் (பாஷையையும்); இகழேல் - பழிக்காதே.

இகழ் - பழி.

(க - உ) கணக்கு, தாய்மொழி இரண்டும் முதன்மை. பழிக்காதே, படி.

8. ஏற்பது இகழ்ச்சி

(ப - உ) ஏற்பது - பிச்சை எடுப்பது; இகழ்ச்சி - பழிப்பாகும்.

2

ஏற்றல் - பிறரைக் கேட்டு வாங்குதல், இரத்தல்.
(க - உ) பிச்சை யெடுப்பது பழிப்பாகும்.

9. ஐயம் இட்டு உண்.

(ப - உ) ஐயம் - பிச்சை; இட்டு - கொடுத்து; உண் - (பிறகு நீ) சாப்பிடு.
இடு - கொடு.
(க - உ) பிச்சை பிறர்க்குக் கொடுத்துச் சாப்பிடு.

10. ஒப்புரவு ஒழுகு.

(ப - உ) ஒப்புரவு - ஒழுக்கமாக; ஒழுகு - நடந்து கொள்.
ஒப்புரவு - ஒழுக்கம், முறைமை.
(க - உ) ஒழுக்கமாய் நட.

11. ஓதுவது ஒழியேல்.

(ப - உ) ஓதுவது - படிப்பதை; ஒழியேல் - விடாதே.
ஓது - படி. ஒழி - விடு.
(க - உ) படிப்பதை விட்டுவிடாதே.

12. ஔவியம் பேசேல்.

(ப - உ) ஔவியம் - பொறுமையாக; பேசேல் - பேசாதே.
பேசு - சொல்.
(க - உ) பொறுமை பேசாதே.

13. அஃகம் சுருக்கேல்.

(ப - உ) அஃகம் - தானிய அளவை; சுருக்கேல் - குறைக்காதே.
அஃகம் - தானியம். சுருக்கு - குறை.
(க - உ) தானிய அளவைக் குறைக்காதே.

14. கண்டு ஒன்று சொல்லேல்.

(ப - உ) கண்டு - (ஒன்றைப்) பார்த்து; ஒன்று - (வேறு) ஒன்றாக; சொல்லேல் - சொல்லாதே.

காண் - பார், சொல் - உரை.

(க - உ) நீ பார்த்ததைச் சொல். அதை மாற்றிச் சொல்லாதே.

15. 'ங' போல் வளை.

(ப - உ) ங - 'ங' என்னும் எழுத்தை; போல் - போல; வளை - (சுற்றத்தாரைத்) தழுவு.

(க - உ) 'ங'வைப் போல் உறவினரைத் தழுவு.

16. சனி நீர் ஆடு.

(ப - உ) சனி - ஊற்று; நீர் - தண்ணீரில்; ஆடு - முழுகு.

சனி - தோன்றுதல்.

(க - உ) ஊற்று நீரில் குளி.

17. ஞயம் பட உரை.

(ப - உ) ஞயம் - இன்பம்; பட - பொருந்த; உரை - சொல்.

(க - உ) இனிமையாய்ப் பேசு.

18. இடம் பட வீடு எடேல்.

(ப - உ) இடம் - இடத்தை; பட - (புழங்காமல்) கிடக்க; வீடு - வீட்டை; எடேல் - கட்டாதே.

படு - பொருந்து, கிட. எடு - கட்டு.

(க - உ) வீட்டைச் சிறுகக் கட்டு.

19. இணக்கம் அறிந்து இணங்கு.

(ப - உ) இணக்கம் - சேருகின்றவர்கள் குணத்தை; அறிந்து - தெரிந்துகொண்டு ; இணங்கு - (நல்லவர்களா னால்) சேர்.

இணங்குதல் - சேருதல்; அறி - தெரி.
(க - உ) நல்லவர்களோடு சேர்.

20. தந்தை தாய் பேண்.

(ப - உ) தந்தை - அப்பாவையும்; தாய் - அம்மாவையும்; பேண் - (நீ) காப்பாற்று.
தந்தை - பிதா. தாய் - அன்னை.
(க - உ) அப்பாவையும் அம்மாவையும் காப்பாற்று.

21. நன்றி மறவேல்.

(ப - உ) நன்றி - (பிறர்செய்த) உதவியை; மறவேல் - மறக்காதே.
மறத்தல் - நினையாமை. நன்றி - நல்ல காரியம்.
(க - உ) உதவியை மறக்காதே.

22. பருவத்தே பயிர் செய்.

(ப - உ) பருவத்தே - தகுந்த காலத்திலே; பயிர் - தானியங்களை; செய் - (நீ) பயிரிடு.
பருவம் - தகுந்த காலம்.
(க - உ) விளையும் காலத்தில் பயிர் செய்.

23. மன்று பறித்து உண்ணேல்.

(ப - உ) மன்று - சபைகளில்; பறித்து - (இலஞ்சம்) வாங்கி; உண்ணேல் - (அதைக்கொண்டு) சாப்பிடாதே.
மன்று - நியாயசபை; பறி - அபகரி; உண் - சாப்பிடு.
(க - உ) இலஞ்சம் வாங்காதே.

24. இயல்பு அலாதன செயேல்.

(ப - உ) இயல்பு - தகுதி; அலாதன - அல்லாத காரியங்களை; செயேல் - செய்யாதே.
(க - உ) தகுதி இல்லாதவற்றைச் செய்யாதே.

25. அரவம் ஆட்டேல்.

(ப - உ) அரவம் - பாம்பை; ஆட்டேல் - (நீ பிடித்து) ஆட்டாதே.

ஆட்டு - அசை.

(க - உ) பாம்பைப் பிடித்து ஆட்டாதே.

26. இலவம் பஞ்சில் துயில்.

(ப - உ) இலவம் பஞ்சில் - இலவம் பஞ்சினல் ஆன மெத்தையில்; துயில் - (நீ) தூங்கு.

(க - உ) இலவம் பஞ்சு மெத்தைமேல் தூங்கு.

27. வஞ்சகம் பேசேல்.

(ப - உ) வஞ்சகம் - கபடமான சொற்களை; பேசேல் - பேசாதே.

வஞ்சி - ஏமாற்று, மோசஞ்செய்.

(க - உ) கபட வார்த்தைகளைப் பேசாதே.

28. அழகு அலாதன செயேல்.

(ப - உ) அழகு - சிறப்பு; அலாதன - அல்லாத காரியங்களை; செயேல் - செய்யாதே.

(க - உ) சிறப்பில்லாத காரியங்களைச் செய்யாதே.

29. இளமையில் கல்.

(ப - உ) இளமையில் - சிறிய வயதில்; கல் - (நீ) படி.

இளமை - சிறு வயது.

(க - உ) சிறு வயதிலேயே படித்துக்கொள்.

30. அறனை மறவேல்.

(ப - உ) அறனை - நடுநிலையான கடவுளை; மறவேல் - மறக்காதே.

அறன் - நடுநிலைக் கடவுள்.

(க - உ) நடுநிலைக் கடவுளை மறக்காதே.

31. அனந்தல் ஆடேல்.

(ப - உ) அனந்தல் - தூக்கத்தை; ஆடேல் (விரும்பிச்) செய்யாதே.

ஆடு - செய்.

(க - உ) மிகுதியாய் நீ தூங்காதே.

32. கடிவது மற.

(ப - உ) கடிவது - கோபித்துப் பேசுவதை; மற - (நீ) மறந்துவிடு.

கடி - கோபி, அச்சம்.

(க - உ) அஞ்சும்படிப் பேசுவதை மறந்துவிடு.

33. காப்பது விரதம்.

(ப - உ) காப்பது - (உயிருள்ள பிராணிகளுக்குக் கெடுதி வராமல்) பாதுகாவலாக இருப்பதே; விரதம் - நோன்பாகும்.

கா - காவல். விரதம் - நோன்பு, தவம்.

(க - உ) உயிர்களுக்குத் துன்பம் வராமல் காப்பதே தவமாகும்.

34. கிழமை படவாழ்.

(ப - உ) கிழமை - (பிறருக்கு) உரிமையாக; பட - பொருந்த; வாழ் - வாழவேண்டும்.

(க - உ) நீ பிறருக்கு உரிமையாக வாழ்க.

35. கீழ்மை அகற்று.

(ப - உ) கீழ்மை - தாழ்ந்த குணங்களை; அகற்று - (நீ) நீக்கிவிடு.

(க - உ) தாழ்ந்த குணங்களை நீக்கு.

36. குணம் அது கை விடேல்.

(ப - உ) குணம் - நல்ல குணம்; அது - அதனை; கை - (உன்) இடமிருந்து; விடேல் - நீக்காதே.

கை - இடம்; விடு - நீக்கு.

(க - உ) நற்குணத்தை நீக்காதே.

37. கூடிப் பிரியேல்.

(ப - உ) கூடி - (அன்பினால் மற்றவரோடு) சேர்ந்து; பிரியேல் - (பின்) நீங்கிவிடாதே.

பிரி - நீக்கு.

(க - உ) அன்பால் சேர்ந்து பிறகு நீங்காதே.

38. கெடுப்பது ஒழி.

(ப - உ) கெடுப்பது - (பிறருக்கு) கெடுதி செய்வதை; ஒழி - நீ விட்டுவிடு.

கெடுத்தல் - துன்பம் செய்தல், அழித்தல்.

(க - உ) கெடுதி செய்யாதே.

39. கேள்வி முயல்.

(ப - உ) கேள்வி - (நல்லவர்கள்) சொல்லைக் கேட்க; முயல் - முயற்சி செய்.

கேள் - சொல்வதைக் கேட்பது, வினை.

(க - உ) நல்லவைகள் கேட்க முயற்சி செய்.

40. கை வினை கரவேல்.

(ப - உ) கை - (உன்) இடமுள்ள; வினை - தொழிலை; கரவேல் - மறைக்காதே.

கர - மறை.

(க - உ) தெரிந்த தொழிலைச் சொல்லாமல் மறைக்காதே.

41. கொள்ளை விரும்பேல்.

(ப - உ) கொள்ளை - திருடுவதற்கு; விரும்பேல் - ஆசைப்படாதே.

கொள் - பெறு, அடை. விரும்பு - ஆசைப்படு.

(க - உ) திருடுவதற்கு ஆசைப்படாதே.

42. கோது ஆட்டு ஒழி.

(ப - உ) கோது - கெடுதியுள்ள; ஆட்டு - செயலை; ஒழி - நீக்கிவிடு.

கோது - குற்றம், கெடுதி.

(க - உ) குற்றமுள்ள விளையாட்டை நீக்கு.

43. சக்கரம் நெறி நில்.

(ப - உ) சக்கரம் - நீதி; நெறி - வழியில்; நில் - இருக்கவேண்டும்.

சக்கரம் - வண்டி உருளை, நீதி.

(க - உ) நீதியான வழியில் இரு, நடந்துகொள்.

44. சான்றோர் இனத்து இரு.

(ப - உ) சான்றோர் - (நல்ல, அறிவு குணங்களில்) மேலானவர்கள்; இனத்து - கூட்டத்தில்; இரு - (சேர்ந்து) இருக்கவேண்டும்.

இனம் - கூட்டம்.

(க - உ) பெரியவர்கள் கூட்டத்தோடு சேர்ந்திரு.

45. சித்திரம் பேசேல்.

(ப - உ) சித்திரம் - மெய்போன்ற பொய்யான சொற்களை; பேசேல் - பேசாதே.

சித்து - ஒன்றை வேறு ஒன்றாகச் செய்தல்.

(க - உ) பொய்யை மெய்போலப் பேசாதே.

46. சீர்மை மறவேல்.

(ப - உ) சீர்மை - சிறந்த குணங்களை, செயல்களை ; மறவேல் - மறந்துவிடாதே.

சீர் - சிறப்பு.

(க - உ) சிறந்த குணஞ் செயல்களை மறக்காதே.

47. சுளிக்க சொல்லேல்.

(ப - உ) சுளிக்க - பிறர் முகம் மாறுபட ; சொல்லேல் - (கொடுமையான சொற்களைப்) பேசாதே.

சுளி - முகத்தைச் சுருக்கு.

(க - உ) பிறர் வருந்தப் பேசாதே.

48. சூது விரும்பேல்.

(ப - உ) சூது - சூது ஆட ; விரும்பேல் - ஆசைப் படாதே.

சூது - ஏமாற்றும் ஆட்டம்.

(க - உ) சூதாட்டத்தை விரும்பாதே.

49. செய்வன திருந்த செய்.

(ப - உ) செய்வன - செய்கின்ற வேலைகளை ; திருந்த - செம்மையாக ; செய் - செய்க.

(க - உ) வேலைகளைச் செம்மையாகச் செய்.

50. சேர் இடம் அறிந்து சேர்.

(ப - உ) சேர் - கூடுதற்கு உரிய ; இடம் - (நல்ல குணமே) இடமாக (உள்ளவர்களை); அறிந்து - தெரிந்து கொண்டு ; சேர் - (பிறகு) கூடு.

(க - உ) நீ நேசிப்பவர்களை ஆராய்ந்து பிறகு கூடு.

51. சை என திரியேல்.

(ப - உ) சை - சீ ; என - என்று (வெறுக்கும்படி); திரியேல் - அலையாதே.

திரி - அலை.

(க - உ) பிறர் சீ என்று வெறுக்கத் திரியாதே.

52. சொல் சோர்வு படேல்.

(ப - உ) சொல் - சொல்லும் சொற்களில்; சோர்வு - (கருத்துக்களைக் குறைத்து) அயர்வு; படேல் - அடையாதே.

சோர்வு - தளர்ச்சி.

(க - உ) சொல்லில் தளர்வு அடையாதே.

53. சோம்பி திரியேல்.

(ப - உ) சோம்பி - (கருத்தில்லாமல்) சோம்பலாக; திரியேல் - (பலவிடங்களில்) அலையாதே.

(க - உ) கருத்து இல்லாமல் சோம்பலாய்த் திரியாதே.

54. தக்கோன் என திரி.

(ப - உ) தக்கோன் - தகுதியுள்ள தலைவன்; என - என்று புகழும்படி; திரி - நடந்துகொள்.

தக்கோன் - தகுந்தவன், சிறந்தவன்.

(க - உ) தகுதியுள்ளவன் என்று புகழ நடந்துகொள்.

55. தானம் அது கை விடேல்.

(ப - உ) தானம் - மகிழ்ந்து கொடுக்கும் பொருள்; அது - அதனை; கை - (உன்) இடமிருந்து; விடேல் - விட்டுவிடாதே.

(க - உ) தானம் செய்வதை ஒழிக்காதே.

56. திருமாலுக்கு அடிமை செய்.

(ப - உ) திரு - அழகான; மாலுக்கு - மாலவனுக்கு; அடிமை - (உரிய) தொண்டுகளை; செய் - பண்ணு.

மால் - மாயோன், அழியாக் கடவுள் முல்லை நிலக் கடவுள். அடிமை - வேலைக்காரன்.

(க - உ) அழியாக் கடவுளுக்கு உரிய வேலைகளைச் செய்.

57. தீ வினை அகற்று.

(ப - உ) தீ - கொடுமையான; வினை - காரியங்களை; அகற்று - விலக்கு.

தீ - நெருப்பு.

(க - உ) கொடுமையான காரியங்களை விலக்கு.

58. துன்பத்திற்கு இடம் கொடேல்.

(ப - உ) துன்பத்திற்கு - வருத்தம் வந்து சேர்வதற்கு; இடம் - இடத்தை; கொடேல் - கொடுக்காதே.

துன்பம் - வருத்தம், மனக்கவலை.

(க - உ) வருத்தத்துக்கு இடம் தராதே.

59. தூக்கி வினை செய்.

(ப - உ) தூக்கி - ஆராய்ந்து பார்த்து; வினை - எந்த வேலையையும்; செய் - பண்ணு.

(க - உ) எந்த வேலையையும் ஆராய்ந்து செய்.

60. தெய்வம் இகழேல்.

(ப - உ) தெய்வம் - கடவுளை; இகழேல் - பழிக்காதே.

இகழ் - பழி, கேலி செய்.

(க - உ) கடவுளைப் பழிக்காதே.

61. தேசத்தோடு ஒத்து வாழ்.

(ப - உ) தேசத்தோடு - (நாட்டில் உள்ள) அறிவுடையவர்களோடு; ஒத்து - இணங்கி; வாழ் - வாழ்க.

தேசம் என்பது உயர்ந்த மக்களைக் குறிக்கும்.

(க - உ) அறிவுடையவர்களோடு சேர்ந்து வாழ்க.

62. தையல் சொல் கேளேல்.

(ப - உ) தையல் - (கெட்ட காரியங்களில்) கட்டுப் படுத்துகின்ற பெண்கள்; சொல் - வார்த்தைகளை; கேளேல் - கேட்டு நீ நடக்காதே.

தை - இணை; தையல் - கட்டுப்படுத்தும் பெண்கள்.

(க - உ) கெட்டகுணமுள்ள பெண்கள் சொல்லைக் கேட்டு அதன்படி நடக்காதே.

63. தொன்மை மறவேல்

(ப - உ) தொன்மை - (நல்ல) பழைய கருத்துக் களை; மறவேல் - மறந்து விடாதே.

தொல் - பழமை. மற - நினையாதே.

(க - உ) பழைய நல்ல கருத்துக்களை மறக்காதே.

64. தோற்பன தொடரேல்.

(ப - உ) தோற்பன - கெடக்கூடிய வேலைகளை; தொடரேல் - (மீண்டும்) துவங்கிச் செய்யாதே.

தோல்வி - வெற்றி இல்லாமை; தொடர் - பின்பற்று.

(க - உ) கெடக்கூடிய வேலைகளைத் துவங்காதே.

65. நன்மை கடை பிடி.

(ப - உ) நன்மை - நல்ல காரியங்களை; கடை - (உன் ஆயுள்) முடிவு வரையில்; பிடி - பற்றி நட.

(க - உ) நல்லவைகளைக் கடைசி வரையில் பின்பற்று.

66. நாடு ஒப்பன செய்.

(ப - உ) நாடு - நாட்டில் உள்ளவர்கள்; ஒப்பன - மதிக்கத் தகுந்த காரியங்களை; செய் - பண்ணு.

நாடு என்பது நாட்டிலுள்ள மக்களைக் குறிக்கும்.

(க - உ) சிறந்தவர்கள் மதிக்கும் நல்ல காரியங்களைச் செய்.

67. நிலையில் பிரியேல்.

(ப - உ) நிலையில் - நல்ல குணங்களை; பிரியேல் - விட்டு விலகாதே.

நிலை - (நல்ல) குணம்.

(க - உ) நற்குணச் சிறப்பிலிருந்து விலகாதே.

68. நீர் விளையாடேல்.

(ப - உ) நீர் - (ஆழமான) குளிர்ந்த நீர் (நிலைகளில்); விளையாடேல் - (கெடுதி வரும்படி) நீந்தி ஆடாதே.

விளைவு - பயன்.

(க - உ) நீர் நிலைகளில் நீந்தி விளையாடாதே.

69. நுண்மை நுகரேல்.

(ப - உ) நுண்மை - (நோயைக் கொடுக்கும்) தாழ்ந்த பண்டங்களை; நுகரேல் - சாப்பிடாதே.

நுகர் - சாப்பிடு, புசி.

(க - உ) நோய் தரும் தாழ்ந்த உணவைச் சாப்பிடாதே.

70. நூல் பல கல்.

(ப - உ) நூல் - (நல்ல அறிவுப்) புத்தகங்கள்; பல - பலவற்றை; கல் - படி.

பல - மிகுதி.

(க - உ) அறிவு நூல்கள் மிகுதியாகப் படி.

71. நெல் பயிர் விளை.

(ப - உ) நெல் - நெல்லு; பயிர் - பயிரை; விளை - (நிலத்தில் விதைத்து) பயன் உண்டாக்கு.

(க - உ) நெல்லை விதைத்துப் பயன் உண்டாக்கு.

72. நேர் பட ஒழுகு.

(ப - உ) நேர் - ஞாயம்; பட - பொருந்த; ஒழுகு - நடந்துகொள்.

நேர்மை - ஞாயம், நடுநிலைமை.

(க - உ) ஞாயமாக நடந்துகொள்.

73. நைவினை நணுகேல்.

(ப - உ) நை - கெடுதல் (வரக்கூடிய); வினை தொழில்களை; நணுகேல் - சேராதே.

நைதல் - கெடுதல், அழிதல். நணுகு - சேர்.

(க - உ) கெட்ட தொழில்களில் சேராதே.

74. நொய்ய உரையேல்.

(ப - உ) நொய்ய - (கருத்தில்லாத) தாழ்ந்த சொற்களை; உரையேல் - சொல்லாதே.

உரை - சொல்.

(க - உ) கருத்தில்லாத இழி சொற்களைச் சொல்லாதே.

75. நோய்க்கு இடம் கொடேல்.

(ப - உ) நோய்க்கு - வியாதிக்கு; இடம் - இருக்கை; கொடேல் - கொடுக்காதே.

கொடு - தா. நோய் - வியாதி.

(க - உ) நோயைத் தடுத்துக் கொள்.

76. பழிப்பன பகரேல்.

(ப - உ) பழிப்பன - வெறுக்கத் தகுந்தவைகளை; பகரேல் - நீ உரைக்காதே.

பழி - வெறு. பகர் - உரை, சொல்.

(க - உ) வெறுக்கத் தகுந்தவைகளை நீ சொல்லாதே.

77. பாம்பொடு பழகேல்.

(ப - உ) பாம்பொடு - பாம்புகளை வைத்து; பழகேல் - (அவற்றோடு) பழகாதே.

பழகு = பயில்.

(க - உ) பாம்புகளோடு பயிலாதே.

78. பிழை பட சொல்லேல்.

(ப - உ) பிழை - தவறு; பட - உண்டாகும்படி; சொல்லேல் - பேசாதே.

(க - உ) தவறு உண்டாகும்படி பேசாதே.

79. பீடு பெற நில்.

(ப - உ) பீடு - பெருமை; பெற - அடைய, நில் - (ஒழுங்காக) நடந்துகொள்.

(க - உ) நீ பெருமை பெற ஒழுங்காக நட.

80. புகழ்ந்தாரை போற்றி வாழ்.

(ப - உ) புகழ்ந்தாரை - (உன்) கீர்த்தியைப் பேசியவர்களை; போற்றி - காப்பாற்றி; வாழ் - வாழ்க.

புகழ் - கீர்த்தி. போற்று - பாதுகார்.

(க - உ) உன் கீர்த்தியைப் பேசியவர்களைப் பாதுகாத்து வாழ்க.

81. பூமி திருத்தி உண்.

(ப - உ) பூமி - நிலத்தை; திருத்தி - பண்படுத்தி; உண் - (விதைத்து விளையும் தானியத்தை) சாப்பிடு.

(க - உ) நிலத்தில் பயிரிட்டுச் சாப்பிடு.

82. பெரியாரை துணை கொள்.

(ப - உ) பெரியாரை - அறிவு குணங்களில் சிறந்தவர்களை; துணை - உதவியாக; கொள் - அடைக.

பெரியார் - நல்ல அறிவு, நல்ல குணம், நல்ல செய்கை உடையவர்; மேலானவர்.

(க - உ) மேலானவர்கள் உதவியை அடைக.

83. பேதைமை அகற்று.

(ப - உ) பேதைமை - அறியாமையை; அகற்று - (நீ) விலக்கு.

பேதை - அறிவு இல்லாதவர்.

(க - உ) அறிவில்லாமையை நீ நீக்கு.

84. பையலோடு இணங்கேல்.

(ப - உ) பையலோடு - சிறுவர்களோ, இணங்கேல் - நேசியாதே.

பையல் - சிறுவர்; சிறுமைக்குணம் உடையவர்.

(க - உ) சிறுவர்களை நேசியாதே.

85. பொருள்தனை போற்றி வாழ்.

(ப - உ) பொருள்தனை - செல்வத்தை; போற்றி - பாதுகாத்து; வாழ் - வாழ்க.

(க - உ) பொருளை அழிக்காமல் காத்து வாழ்க.

86. போர் தொழில் புரியேல்.

(ப - உ) போர் - சண்டையிடும்; தொழில் - வேலையை; புரியேல் - செய்யாதே.

புரி - செய்.

(க - உ) சண்டையிடும் தொழிலைச் செய்யாதே.

87. மனம் தடுமாறேல்

(ப - உ) மனம் - (கவலையால்) நெஞ்சு; தடுமாறேல் - கலங்காதே.

தடுமாறு - கலங்கு.

(க - உ) கவலையால் நெஞ்சு கலங்காதே.

88. மாற்றானுக்கு இடம் கொடேல்.

(ப - உ) மாற்றானுக்கு - விரோதிக்கு; இடம் - (உன்) இடத்தை; கொடேல் - கொடுக்காதே.

மாற்றான் - விரோதி; பகைவன்.

(க - உ) விரோதியை நெருங்க விடாதே.

89. மிகை பட சொல்லேல்.

(ப - உ) மிகை - அதிகமாக; பட - (சொற்கள்) இருக்க; சொல்லேல் - சொல்லாதே.

(க - உ) வீண் சொற்கள் பேசாதே.

90. மீது ஊண் விரும்பேல்.

(ப - உ) மீது - மிகுதிப் படும்படியான; ஊண் சாப்பாட்டை; விரும்பேல் - ஆசைப் படாதே.

ஊண் - உணவு.

(க - உ) மிகுதியான உணவை விரும்பாதே.

91. முனை முகத்து நில்லேல்.

(ப - உ) முனை - சண்டை செய்யும்; முகத்து - இடத்தில்; நில்லேல் - நிற்காதே.

முகம் - இடம்.

(க - உ) சண்டை செய்யுமிடத்தில் நிற்காதே.

92. மூர்க்கரோடு இணங்கேல்.

(ப - உ) மூர்க்கரோடு - பிடிவாத குண முள்ள தாழ்ந்தவரோடு; இணங்கேல் - சேராதே.

மூர்க்கர் - பிடிவாதக்காரர்; முரட்டுத்தனம் உடையவர்.

(க - உ) பிடிவாதக்காரரோடு சேராதே.

93. மெல் இல் நல்லாள் தோள் சேர்.

(ப - உ) மெல் - மிருதுவான; இல் - வீட்டிலுள்ள; நல்லாள் - நற்குணமுள்ள மனைவியது; தோள் - தோளை; சேர் - அடைக.

(க - உ) மனைவியைச் சேர்ந்து வாழ்.

94. மேல் மக்கள் சொல் கேள்.

(ப - உ) மேல் - சிறந்த; மக்கள் - அறிவுடையவர்கள்; சொல் - (சொல்லும்) சொற்களை; கேள் - கேட்டு நட.

(க - உ) அறிவுடையோர் சொல் கேட்டு நட.

95. மை விழியார் மனை அகல்.

(ப - உ) மை - மை(யிட்ட); விழியார் - கண்களையுடைய பெண்கள் (வேசிகள்); மனை - வீட்டை; அகல் - விலகு.

விழி - கண். மை - கறுப்பு; தீமை. மனை - வீடு.

(க - உ) வேசிகள் வீட்டை விலக்கு.

96. மொழிவது அற மொழி.

(ப - உ) மொழிவது - சொல்லுகின்ற கருத்தை; அற - (சந்தேகம்) நீங்க; மொழி - சொல்லுக.

(க - உ) கருத்தைச் சந்தேகம் நீங்கச் சொல்.

97. மோகத்தை முனி.

(ப - உ) மோகத்தை - காமத்தை; முனி - வெறுத்து விடு.

மோகம் - காமம், ஆசை.

(க - உ) காமத்தை வெறுத்து விடு.

98. வல்லமை பேசேல்.

(ப - உ) வல்லமை - (உனக்கிருக்கும்) பலத்தைப் பற்றி; பேசேல் - (நீ பிறரிடம்) சொல்லாதே.

(க - உ) உன் பலத்தைப் பிறர்க்குக் கூறாதே.

99. வாது முன் கூறேல்.

(ப - உ) வாது - தருக்கப் பேச்சுகளை; முன் - (பெரியோர்) எதிரில்; கூறேல் - பேசாதே.

(க - உ) பெரியோர் முன் தருக்கம் பேசாதே.

100. வித்தை விரும்பு.

(ப - உ) வித்தை - (ஒழுக்கக்) கல்வியை; விரும்பு - (கற்க) ஆசைப்படு.

(க - உ) ஒழுக்கக் கல்வி கற்க ஆசைகொள்.

101. வீடு பெற நில்.

(ப - உ) வீடு - (இன்ப துன்பத்திலிருந்து) விடுதலை; பெற - அடைய; நில் - (தவ வழியில்) ஒழுகு.

(க - உ) விடுதலையடையத் தவம் இரு.

102. உத்தமனாய் இரு.

(ப - உ) உத்தமனாய் - மேலானவனாய்; இரு - நடந்து கொள்.

உத்தமன் - மேலானவன்.

(க - உ) மேலானவனாய் நட.

103. ஊருடன் கூடி வாழ்.

(ப - உ) ஊருடன் - ஊரில் உள்ளவர்களுடன்; கூடி - (பகையில்லாமல்) சேர்ந்து; வாழ் - வாழ்க.

(க - உ) ஊராரோடு பகையின்றிச் சேர்ந்து வாழ்க.

104. வெட்டு என பேசேல்.

(ப - உ) வெட்டு - துண்டிப்பது; என - போல; பேசேல் - (கடிய சொற்களைப்) பேசாதே.

(க - உ) வெட்டுவது போலக் கடூரமான சொற்களைப் பேசாதே.

105. வேண்டி வினை செயேல்.

(ப - உ) வேண்டி - ஒரு பொருளை விரும்பி; வினை - (பாவச்) செய்கையை; செயேல் - செய்யாதே.

வேட்டல் - விரும்பல். பாவம் - தீராப் பழி.

(க - உ) பொருளை விரும்பிப் பாவச் செயல் செய்யாதே.

106. வைகறை துயில் எழு.

(ப - உ) வைகறை - விடியற் காலையில்; துயில் - தூக்கத்திலிருந்து; எழு - (நீ) எழுந்திரு.

வைகறை - பொழுது புலரும் காலம்.

(க - உ) தூக்கத்தை விட்டு விடியற் காலத்தில் (மகிழ்வோடு) எழுந்திரு.

107. ஒன்னாரை தேறேல்.

(ப - உ) ஒன்னாரை - (ஒரு சமயம்) பகைவர்களாயிருந்தவர்களை; தேறேல் - (மற்றொரு சமயம் நண்பர்களெனத்) துணியாதே.

ஒன்னார் - பகைவர்; விரோதிகள். தேறல் - துணிதல்.

(க - உ) முன் பகைவரானாரைப் பின் நண்பரெனத் துணியாதே.

108. ஓரம் சொல்லேல்.

(ப - உ) ஓரம் - ஒருவர் சார்பாய்; சொல்லேல் - (வழக்குகளில்) சொல்லாதே.

ஓரம் - பட்சபாதம், ஒரு பக்கம்.

(க - உ) வழக்குகளில் ஒருபக்கம் பேசாதே.

ஆத்திசூடி உரை முற்றும்.